# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2403/31 - 2024 සැප්තැම්බර් මස 25 වැනි බදාදා - 2024.09.25

*2403/31 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 25 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**மருத்துவ கட்டளை சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளை நியமித்தல்**

1987 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க மற்றும் 1988 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான மருத்துவ கட்டளைச் சட்டத்தின் பிரிவு 69/A/2 இன் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில், சுகாதார அமைச்சர் டாக்டர் ரமேஷ் பத்திரன ஆகிய நான், கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட அவர்களது அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதியிலும் மற்றும் சேவைத் தேவைகளின் நிமித்தம் செயல்படுவதற்கு அவர்கள் நியமிக்கப்படக்கூடிய வேறு எந்த பகுதியிலும் மேற்படி சட்டத்தின் நோக்கத்திற்காக கீழ்க்கண்ட அதிகாரிகளை அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளாக நியமித்து இந்த அறிவிப்பின் மூலம் கட்டளை பிறப்பித்து அறிவிக்கிறேன். கீழே உள்ள அட்டவணையில் மேலும் சிறப்பாக கட்டமைக்கப்பட்டுள்ள சேவையில் இருக்கும் அத்தகைய பதவிகளை வகிக்கும் மற்றும் அவ்வப்போது அவ்வாறான பதவிகளுக்கு நியமிக்கப்படும் மற்றும் மற்றொரு அதிகாரிக்காக பதில் கடமையாற்றும் அதிகாரிகள் அவர்களின் பதவி நிலையின் காரணமாக அவர்கள் இந்த பதவியில் நியமிக்கப்படுகிறார்கள்.

இந்த நியமனங்கள் அனைத்தும் உத்தியோகத்தர் சேவையில் இருக்கும் வரை செல்லுபடியானதாக இருக்கும்.

**அட்டவணை**

| *வகை* | *ஒதுக்கப்பட்ட பகுதி* |
|---|---|
| சுகாதார வைத்திய அதிகாரி (MOH) | தொடர்புடைய MOH பகுதி அல்லது அலுவலகம் |
| பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் (RDHS) | தொடர்புடைய RDHS பகுதி அல்லது அலுவலகம் |

**வைத்தியர் ரமேஷ் பத்திரன,**
*சுகாதார அமைச்சர்.*

கொழும்பு,
*2024, ஓகத்து 20.*

EOG 09 - 0174


1A - PG 6884 — 154 (2024/09) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*